00122

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்

**ESC1137/ EPC1237**

சுற்றாடலை ஆராய்தலும் ஒன்றிணைந்த அணுகுமுறையும்

நேரம் : பி.ப 02.00 - பி.ப 04.00

திகதி :14.06.2019 காலம் : 2 மணித்தியாலம்

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக

பகுதி 1

1. 'சுற்றாடல்' எனும் பதத்தினை உமது சொந்த மொழிநடையில் விளக்குக?

2. 'ஒன்றிணைந்த அணுகுமுறை' எனும் பதத்தினால் நீர் கருதுவது யாது?

3. உயிருள்ளவை, உயிரற்றவை என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை எழுதுக?

4. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான திட்டமிடப்பட்ட செயற்பாடொன்றின் ( கருப்பொருள் அடிப்படையானது) வெற்றியைக் கண்டறிவதற்காக மதிப்பீடு செய்ய வேண்டிய பகுதிகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக?

5. இயற்கை மூலை, இயற்கை அருங்காட்சியகம் என்பன முன்பள்ளியில் இருப்பதனால் பிள்ளைகள் அடையக்கூடிய அனுகூலங்கள் நான்கினை (04) பட்டியலிடுக?

6. ஒன்றிணைந்த கற்றல் அணுகுமுறையில் பிள்ளைகள் செயற்பாடுகளில் ஈடுபடும்போது அவர்களை எவ்வாறு அவதானிக்க வேண்டுமென சுருக்கமாக விளக்குக.

7. "முன்பள்ளி வயதுப் பிள்ளைகள் சுற்றாடலை ஆராய்வதற்கு தோட்டமொன்று அவசியமாகும்" இக்கூற்றினை ஏற்றுக் கொள்கிறீர்களா? உமது விடையினை நியாயப்படுத்துக?

8. நிலத்தில் வாழும் விலங்குகளை ஐந்தாக (05) வகைப்படுத்த முடியும். அவ்வைந்து வகைகளையும் பட்டியலிட்டு ஒவ்வொரு வகைக்கும் ஓர் உதாரணம் வீதம் தருக?

**(08x05=40புள்ளிகள்)**

00122

## பகுதி 2

9\. i) சுற்றாடலின் இரண்டு பிரதான வகைப்படுத்தல்களைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

ii) நீங்கள் குறிப்பிட்டவற்றுள் ஏதாவது ஒரு வகையினைத் தெரிவுசெய்து அதனை விபரிக்குக?

(08 புள்ளிகள்)

iii) நீங்கள் தெரிவு செய்த வகைப்படுத்தலில் பிள்ளைகளுக்கு அனுபவங்களை வழங்குவதற்கு பயன்படுத்தக்கூடிய இரண்டு கற்பித்தல் சாதனங்களை விளக்குக? (08 புள்ளிகள்)

10\. கீழுள்ளவற்றுள் ஏதாவது ஒரு கருப்பொருளைத் தெரிவு செய்து அதில் விபரமான பாடத்திட்டமொன்றைத் தெரிவு செய்க?

அ) மிருகங்கள் ஆ) மழை நாள் இ) சந்தை ஈ) சிறுவர் பூங்கா

உமது திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் அவசியம்

i) பாடத்தைப் பற்றிய பின்னணித் தகவல் (கருப்பொருள், பிள்ளைகளின் வயது பிள்ளைகளின் எண்ணிக்கை)
ii) செயற்பாட்டின் நிலை
iii) பிள்ளைகளின் தனியாள் செயற்பாடு
iv) கற்பித்தல் சாதனங்கள்

**(05x04=20புள்ளிகள்)**

11\. (i) கருப்பொருள் ரீதியான கற்பித்தல் அணுகுமுறை பாடரீதியான கற்பித்தல் அணுகுமுறை என்பனவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) 'ஒன்றிணைந்த கற்றல் அணுகுமுறையானது பிள்ளைகள் தமது உண்மையான வாழ்க்கைத் தேவையான திறன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உண்மையான அனுபவங்களைப் பெறவும் பிள்ளைகளுக்குத் துணை செய்கின்றது'.

இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா உமது விடைக்கான காரணத்தை தருக

(15புள்ளிகள்)

12 (i) 'எமக்கு உதவுவோர்' என்னும் கருப் பொருளில் ஏதாவது ஒரு கருப்பொருளைத் தெரிவு செய்க. அக்கருப்பொருளின் கீழுள்ள ஒவ்வொரு பாடத்திற்கும ஒவ்வொரு எண்ணக்கருவை எழுதுக.
அ) முன்- மொழித்திறன் விருத்தி
ஆ) முன்- கணித எண்ணக்கரு விருத்தி
இ) சுற்றாடல்
ஈ) அழகியல் செயற்பாடு (10 புள்ளிகள்)

(iii) மேலே நீங்கள் குறிப்பிட்ட எண்ணக்கருவுக்கு ஏற்ப நாளொன்றுக்கான செயற்பாட்டை ஒன்றிணைந்த அணுகுமுறையின் அடிப்படையில எவ்வாறு மேற்கொள்வீர்?

(10 புள்ளிகள்)

13.

i) முன்பள்ளிப் பிள்ளைகள் கற்றாடலை ஆராய்வதற்கு அவதானிப்பை எவ்வாறு பயன்படுத்த முடியுமென விபரிக்குக? (04 புள்ளிகள்)

ii) முன்பள்ளிப் பிள்ளைகள் அவதானித்துக் கற்பதற்கு ஏற்ற விதத்தில் 'இயற்கை மூலைகளை' நீங்கள் எவ்வாறு ஒழுங்கமைப்பீர்கள் என விளக்குக? (08 புள்ளிகள்)

iii) முன்பள்ளிப் பிள்ளைகள் செல்வதற்கு பொருத்தமான இடமொன்றைத் தெரிவு செய்து அதனை ஆராய்வதன் முக்கியத்துவத்தினை விபரிக்குக? (04 புள்ளிகள்)

iv) மேலே நீங்கள் குறிப்பிட்ட இடத்தின் முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு அவதானித்தலின் மூலம் கற்பதற்குப் பொருத்தமான அனுபவங்கள் முன்பள்ளி ஆசிரியரொருவரால் எவ்வாறு வழங்க முடியுமென விளக்குக? (04 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*